දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister: 2784832, 2784807, 2785617

ලේකම් / செயலாளர் / Secretary: 2784812

කාර්යාලය / அலுவலகம் / Office: 2785141-50, Fax: 2784846

ඊමේල් / ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்விஅமைச்சு
Ministry of Education

"ඉසුරුපාය", ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ
බත්තරමුල්ල
"இசுருபாயா" ஸ்ரீ
பத்தரமுல்ல
"Isurupaya",
SriJayawardhanapura.Kotte
Battaramulla.

ඔබේ අංකය / உமது இல / Your No. ......................................

මගේ අංකය / எமது இல / My No.: ED/01/44/06/05

දිනය / திகதி / Date: 2016.06.10

சுற்று நிருப இல. 19/2016

சகல மாகாண பிரதான செயலாளர்கள்.
சகல மாகாண கல்விச் செயலாளர்கள்.
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்.
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்.
சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்/உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்.

**ஆசிரியர் அறிக்கைப் புத்தகம்**

.ஆசிரியர்களினால் செயற்படுத்தப்படுகின்ற பணிகளை அறிக்கைப்படுத்துதல் மற்றும் அவர்களை சுய மதிப்பீட்டுக்கு ஊக்கப்படுத்துதல் என்பனவற்றுக்காக கல்வி அமைச்சினால் 2016 ஆம் வருடத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஆசிரியர் அறிக்கைப் புத்தகத்தை நடைமுறைப்படுத்தும் நோக்குடன் இச் சுற்று நிருபம் வெளியிடப்படுகின்றது.

இந்த ஆசிரியர் அறிக்கைப் புத்தகத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு எதிர் பார்க்கப்படுகின்றது.

1. ஆசிரியரை சுய மதிப்பீட்டுக்கு உட்படுத்துதல்.
2. ஆசிரியர் மதிப்பீடுகளின் போது ( செயலாற்றுகை ,ஆசிரியர் கௌரவிப்பு / பாராட்டு, நேர்முகப் பரீட்சைகள், பதவி உயர்வு ) என்பனவற்றுக்காக கருத்தில் கொள்ளல்.
3. பாடசாலை முகாமைத்துவத்தை இலகு படுத்துதல்.
4. பாடசாலை உள்ளக மற்றும் வெளிவாரி மதிப்பீட்டுச் செயற்பாடுகளின் போது தகவல்களைப் பெற்றுக் கொள்ளல்.
5. ஆசிரியரின் தனிப்பட்ட ஆற்றல்களையும் இயலுமைகளையும் அறிக்கைப்படுத்திக் கொள்ளல்.

இவ் அறிக்கைப் புத்தகம் 10 வருட காலத்திற்கு பயன்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்டுள்ளதோடு தமது சேவை காலத்தினுள் ஆசிரியர் அறிக்கைப் புத்தகத்தை தற்காலப் படுத்தி நடைமுறைப்படுத்துவது ஒவ்வொரு ஆசிரியரினதும் பொறுப்பாகும். ஒவ்வொரு ஆசிரியராலும் இந்த ஆசிரியர் அறிக்கைப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள 03 ஆம் இலக்க படிவத்தை வருடாந்தம் பூரணப்படுத்தப்பட வேண்டும்.

சகல ஆசிரியர்களுக்கும் ஒரு ஆசிரியர் அறிக்கைப் புத்தகம் வீதம் வழங்குதல் மற்றும் இது தொடர்பாக தெளிவுப் படுத்துதல் என்பன ஒவ்வொரு அதிபரதும் பொறுப்பாகும்.

மாகாண, வலய மற்றும் கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் இது தொடர்பாக அதிபர்களுக்கு தெளிவுப்படுத்துதல் மற்றும் இப் புத்தகம் முறையாகப் பயன்படுத்தப் படுகின்றதா என்பது தொடர்பாக கண்காணித்தல் வேண்டும்.

ஏதாவது ஒரு வகையில் ஆசிரியர் அறிக்கைப் புத்தகம் காணாமல் போகுமாயின் அதிபர் தமது சுயவிபரக் கோவை வைக்கப்பட்டுள்ள காரியாலயத்தின் அதிகாரிக்கு அறிவித்து அவரது சிபாரிசுடனும் மாகாணக் கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடனும் புதிய பிரதி ஒன்றைப் பெற்றுக் கொள்ள வேணடும்.

டப்ளியூ.எம்.பந்துசேன.
செயலாளர்.
கல்வி அமைச்சு